## காந்தியடிகள் இழிவுபடுத்தப்படுவதைத் தடுத்தாக வேண்டும்!

# மதவெறியை மாய்ப்போம் - மனித நேயம் காப்போம்!

## ஜன. 30 - 'மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி' - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, ஜன. 30 -**

**அண்ணல் காந்தியடிகளின் நினைவு நாளான ஜன. 30 அன்று மத நல்லிணக்க உறுதிமொழி எற்பு நிகழ்ச்சியை யொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் "காந்தியடிகள் இழிவு படுத்தப்படுவதைத் தடுத்தாக வேண்டும்" என்றும், "மத வெறியை மாய்ப்போம், மனித நேயம் காப்போம்" என்றும் கூறியுள்ளார்.**

*இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*



"என் மதத்தின் மீது சூளுரைத்தே சொல்கிறேன். என் மதத்திற்காக நான் உயிர் துறக்கவும் தயார். ஆனால் அது என்னுடைய சொந்த விவகாரம். அதில் அரசுக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை." என்று நிமிர்ந்து சொன்னவர் மகாத்மா காந்தியடிகள். தன்னை இந்து என்று அடையாளப்படுத்திக் கொண்டவர். அதே நேரத்தில் தன்னைப் போலவே அனைத்து மதத்தவர் உணர்வுக்கும் மரியாதை கொடுத்தவர் அவர். அனைத்து மதங்களும் ஒரே நோக்கம் கொண்டவை என்றவர் அவர்.

### ஆளுநரின் வன்மம் கலந்த நோக்கம்!

ஒற்றை மதவாத தேசியவாதத்தை அவர் ஏற்கவில்லை. அதனாலேயே மத வெறிக்கு அவர் பலியானார். 75 ஆண்டுகள் ஆனபிறகும் அண்ணல் காந்தியார் மீதான கோபம், வகுப்புவாதிகளுக்குக் குறையவில்லை. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் காந்தியாரை வலதுசாரி சக்திகள் இழிவுபடுத்துவது தொடர்கதை!

'காந்தியால் இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை' என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி சொல்லி இருப்பதும் இதே வன்மம் கலந்த நோக்கத்துடன்தான்.

### நாடு வகுப்புவாதச் சகதியில் சிக்கி இருக்கிறது!

'தேசத்தந்தை' என்று போற்றப்படும் காந்தியடிகளை, பொய்களாலும் அவதூறுகளாலும் கொச்சைப்படுத்தும் காலமாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவரது கொள்கைகள் மட்டுமல்ல, அவரே இழிவு படுத்தப்படுகிறார். இது நிகழ்காலம் எவ்வளவு வகுப்புவாதச் சகதியில் சிக்கி இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகும். இதனை உடனே தடுத்தாக வேண்டும்.

மதநல்லிணக்கத்தின் அடையாளமான அண்ணல் காந்தியடிகள் அவர்கள் மதவெறியர்களால் கொல்லப்பட்ட ஜனவரி 30 ஆம் நாளை, நாடு முழுவதும் மதநல்லிணக்க நாளாகக் கடைப்பிடிக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும். மதச்சார்பற்ற ஜனநாயகச் சக்திகள் இதில் கவனம் செலுத்தியாக வேண்டும். அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டுக்கு இந்தக் கடமை அதிகம் இருக்கிறது. எனவே, ஜனவரி 30ஆம் நாளன்று மத நல்லிணக்க உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### மக்களின் மனதில் குடியிருக்கிறார் அண்ணல் காந்தியடிகள்!

இந்தியா முழுமைக்குமான ஒற்றுமையின் அடையாளமாக இருக்கின்ற அண்ணல் காந்தியின் புகழைச் சிதைப்பதன் மூலமாக இந்திய நாட்டின் பன்முகத் தன்மையைச் சிதைக்க முயற்சிக்கிறார்கள். அண்ணல் காந்தி அடிகளின் பிறந்த நாளை 'சுவச்ச பாரத் அபியான்' என மாற்றியதில் இருக்கிறது இவர்களது அழித்தல் வேலைகள். இது காந்தியின் அனைத்து அடையாளங்களையும் அழித்தல் ஆகும். அதே போன்ற காரியத்தைத்தான் அக்டோபர் 2ஆம் நாள் ஊர்வலம் நடத்துவதன் மூலமாக ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பு திசைதிருப்பப் பார்த்தது. அதனை தமிழ்நாடு அரசு அனுமதிக்கவில்லை. எத்தகைய திரைமறைவு வேலைகள் பார்த்தாலும், மக்களின் மனதில் குடியிருக்கிறார் அண்ணல் காந்தி.

### ஜன. 30 -ல் மாவட்டக் கழகங்களில் உறுதிமொழி ஏற்பு !

நாடு சந்தித்து வரும் மதவெறி பாசிச நடவடிக்கைகளுக்கு எதிராகவும், நாட்டு மக்கள் அனைவரும் மத வேறுபாடின்றி ஒற்றுமையாக வாழ்ந்திட வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் வகையிலும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியை ஜனவரி 30 அன்று மாவட்டக் கழகங்கள் நடத்திட வேண்டும். இதில் அனைத்து மதங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளையும் பங்கேற்கச் செய்ய வேண்டும்.

வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட இந்திய நாட்டின் பண்பாட்டையும், 'எல்லோர்க்கும் எல்லாம்' என்ற தமிழ்நாட்டின் மாண்பையும் இந்திய ஒன்றியத்திற்கு வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக திட்டமிட்டு நடத்திட வேண்டும்.



**மதநல்லிணக்கத்தின் அடையாளமான அண்ணல் காந்தியடிகள் அவர்கள் மதவெறியர்களால் கொல்லப்பட்ட ஜனவரி 30ஆம் நாளை, நாடு முழுவதும் மதநல்லிணக்க நாளாகக் கடைப்பிடிக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும். மதச்சார்பற்ற ஜனநாயகச் சக்திகள் இதில் கவனம் செலுத்தியாக வேண்டும். அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டுக்கு இந்தக் கடமை அதிகம் இருக்கிறது. எனவே, ஜனவரி 30ஆம் நாளன்று மதநல்லிணக்க உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.**

மதவெறியை மாய்ப்போம், மனித நேயம் காப்போம்! வாழ்க அண்ணல் காந்தியின் புகழ்!

இந்நிகழ்வில் கீழ்க்கண்ட உறுதிமொழியை அனைவரும் எடுத்திட வேண்டும்.

**''அன்பை – வாழ்க்கை அறநெறியாகக் கொண்டும் –**
**மனித நேயத்தை – நடைமுறை வழியாகக் கொண்டும் வாழ்வேன்!**

**அனைத்து உயிரும் ஒன்றென்று நினைத்து**
**அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்வேன்!**

**மதவெறியை விலக்கி**
**மதநல்லிணக்கம் பேணுவேன்!**

**மக்கள் ஒற்றுமையே**
**மானுடத்தின் வளமும் நலமும் என்பதை மனதில் வைத்தே**
**எந்நாளும் உழைப்பேன்!**

**மக்களைப் பிளவுபடுத்தும் ஜாதி,**
**மத எண்ணங்களை விலக்கி**
**அனைத்து மக்களையும் ஒன்றென நினைத்து**
**அரவணைத்துச் செல்வேன்!**

**'வேற்றுமையில் ஒற்றுமை' காணும்**
**இந்தியச் சமூகத்தில்**
**வேற்றுமையை விதைக்கும்**
**அனைத்து நச்சுக் கருத்துகளையும்**
**அணுவளவும் ஏற்க மாட்டேன்!**

**அனைத்துயிரும் ஒன்றென நினைத்து**
**மனித நேயத்தையே நடைமுறை**
**வழிமுறையாகக் கொண்டு வாழ்வேன்!**

**அனைவரிடமும் நல்லிணக்கம் பேணுவேன்!**
**மானுடம் போற்றுவேன்!"**

### மாவட்டப் பொறுப்பு அமைச்சர்கள் பங்கேற்பீர்!

இந்நிகழ்வில் அந்தந்த மாவட்டப் பொறுப்பு அமைச்சர்கள் கலந்து கொள்ள வேண்டும். கழகச் சிறுபான்மையினர் அணியினர் மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் இணைந்து பணியாற்றிட வேண்டும்.

மனிதநேயம், மதநல்லிணக்கம், பொது அமைதி ஆகியவற்றுக்காக நடத்தப்படும் நிகழ்வு என்பதால் அனைத்துப் பொதுமக்களும் இதில் பங்கெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த உறுதிமொழி ஏற்பு நிகழ்வில், மதநல்லிணக்கத்தை வலியுறுத்தும் கீழ்க்காணும் முழக்கங்களை எழுப்பிடுவீர்!

**காப்போம் காப்போம்!**
**மனித நேயம் காப்போம்!**

**விலக்குவோம் விலக்குவோம்!**
**மதவெறியை விலக்குவோம்!**

**காப்போம் காப்போம்!**
**வேற்றுமையில் ஒற்றுமை காப்போம்!**

**விலக்குவோம்! விலக்குவோம்!**
**நமக்குள் உள்ள பிளவுகளை விலக்குவோம்!**

**வேரறுப்போம் வேரறுப்போம்!**
**மதவெறி சக்திகளை வேரறுப்போம்!**

**வேரறுப்போம் ! வேரறுப்போம்!**
**பிளவுபடுத்தும் சக்திகளை வேரறுப்போம்!**

**'பிறப்பொக்கும்' என்பதே, நமது அறமாகும்.**
**'யாவரும் கேளிர்' என்பதே, நமது பண்பாகும்.**

**வேண்டும் வேண்டும்;**
**அமைதியான இந்தியா வேண்டும்!**
**வேண்டாம் வேண்டாம்**
**வகுப்புவாத இந்தியா வேண்டாம்.**

**அமைப்போம் அமைப்போம்!**
**சமூக நீதிச் சமுதாயம் அமைப்போம்!**

**உருவாக்குவோம் உருவாக்குவோம்!**
**சமூக ஒற்றுமை உருவாக்குவோம்!**

**வேண்டும் வேண்டும்;**
**மதநல்லிணக்கம் வேண்டும்!**

**வேண்டாம் வேண்டாம்;**
**மக்களுக்குள் மதப்பிளவுகள் வேண்டாம்.**

**உருவாக்குவோம் உருவாக்குவோம்;**
**அனைவர்க்குமான இந்தியாவை உருவாக்குவோம்!**

**வேண்டும் வேண்டும்!**
**ஒற்றுமை இந்தியா வேண்டும்!**

*இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*

---

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு! கடலூர் மேற்கு மாவட்டம்

## மங்கலம்பேட்டையில் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை!

*கடலூர், ஜன. 30 -*

*மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்கிறார் என அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-*



*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க அண்ணல் மகாத்மா காந்தியடிகளை இழிவு படுத்துவதை தடுத்தாக வேண்டும். மதவெறியை மாய்ப்போம், மனித நேயம் காப்போம். அண்ணல் காந்தியடிகளின் நினைவு நாளையொட்டி மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி இன்று (30.01.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 9 மணி அளவில் கடலூர் மாவட்டம் மங்கலம்பேட்டையில் எனது (அமைச்சர் சி.வி.கணேசன்) தலைமையில் நடைபெறுகிறது.*

*இந்த மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு உறுதிமொழி ஏற்கிறார்.*

*அது சமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் தலைமைக் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் ஒன்றியக் குழு பெருந் தலைவர்கள், நகர மன்றத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் சி.வி.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*



தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞராகப் பொறுப்பேற்ற மூத்த வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், தமிழக அரசின் வழக்கறிஞராக பொறுப்பேற்றுள்ள ஏ.எட்வின் பிரபாகர் ஆகியோருக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. மற்றும் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி., வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி., தமிழக அரசின் கூடுதல் வழக்கறிஞர் ரவீந்திரன், அரசு கூடுதல் பிளிடர் சீனிவாசன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

---

### திண்டுக்கல் - ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் - நவாப்பட்டியில்

## மேல்நிலைப்பள்ளிக்கு ஆய்வக வசதியுடன் கூடிய கட்டிடம்!

### அமைச்சர் ஐ.பெரியசாமி உடனடி நடவடிக்கை! பொதுமக்கள் மகிழ்ச்சி!

*சின்னாளபட்டி, ஜன. 30-*

*திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கன்னிவாடி பேரூராட்சி நவாப்பட்டியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.2 கோடியே 40 லட்சம் மதிப்பில் ஆய்வக வசதியுடன் கூடிய கட்டிடம் கட்டப்படும் என ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்ததன் பேரில் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகளை கட்டிக் கொடுக்க பணிகள் நடைபெற உள்ளது. தங்களின் வேண்டுகோளை ஏற்று புதிய வகுப்பறைகளை கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுத்துவரும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு பெற்றோர்கள், பள்ளி ஆசிரியைகள் பள்ளி மாணவிகள் மனதார பாராட்டு தெரிவித்துள்ளனர்.*

*திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் நவாப்பட்டியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் பேரூராட்சி பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கு 100 நாள் வேலை திட்டம் மூலம் பணிகள் வழங்குவதற்கான அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்த ஆத்தூர் சட்ட மன்றத் தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணை பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமியிடம் பள்ளி மாணவிகள் தங்கள் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வக வசதி கட்டிடம் வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். ஒரே மாதத்தில் ரூ. 2 கோடியே 40 லட்சம் மதிப்பில் நவாப்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஏற்பாட்டின்படி புதிய வகுப்பறை கட்டிடம் மற்றும் ஆய்வகம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான ஆயத்தப் பணி நடைபெற்று வருகிறது. இச்செய்தி பள்ளி மாணவிகள் பெற்றோர்கள், ஆசிரியைகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*இதுகுறித்து நவாப்பட்டி வார்டு உறுப்பினரும், கன்னிவாடி பேரூராட்சி மன்ற துணைத்தலைவருமான கீதாமுருகானந்தம் கூறுகையில் அமைச்சரிடம் கோரிக்கை மனுதான் கொடுத்தோம். உடனடியாக கன்னிவாடி பகுதியில் உள்ள பள்ளி மாணவிகளின் நலன் கருதி ரூ.2 கோடியே 40 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமியின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.24 லட்சம் மதிப்பில் புதிய கழிவறைகள் கட்டிக்கொடுக்க உத்தரவிட்டு அதற்கான பணிகள் நடைபெற்றுவரும் நிலையில் மகிழ்ச்சியளிக்கும் விதமாக எங்களுக்கு புதிய வகுப்பறை கட்டிட வசதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அவருக்கு எங்கள் பகுதி மக்கள் என்றும் உறுதுணையாக இருப்பார்கள் என்றார்.*



மகாராஷ்டிர மாநிலம், மும்பையில் உள்ள மகாராஷ்டிரா விதான் சபாவில் 27.01.2024 அன்று தொடங்கிய 84 வது அனைத்திந்திய சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை தலைவர்கள் மாநாட்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை சார்பில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கலந்துகொண்டு உரையாற்றினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி உள்ளார்.